***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.28/2023 – P.W. 7 (LW9)***

| | |
|---|---|
| *Name* | திரு.காந்தி (உதவி ஆய்வாளர்) |
| *Father Name* | கிருஷ்ணன் |
| *Village* | கும்பகோணம் மேற்கு காவல் நிலையம் |
| *Age* | 55 |

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 13.10.2025*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது கும்பகோணம் மேற்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 15.07.2021-ம் தேதியன்று நான் பெருகவாழ்ந்தான் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பிலிருந்த போது மன்னார்குடி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப் பெற்ற தகவலை பெற்று, அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த ராமமூர்த்தி மகன் பிரசாந்த் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின் நிலையம் வந்து நிலைய மனு எண்.263/2021 ஆக மனு தாக்கல் செய்து, மனு விசாரணைக்கு பின் சம்பவம் உண்மையென தெரியவந்த நிலையில் கடந்த 17.07.2021-ம் தேதியன்று எதிரிகள் மீது காவல் நிலைய குற்ற எண்.381/2021 இ.த.ச. சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி),323,324,506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பின்னர் இவ்வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் சிவபிரகாசம் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஒரு புகாரை பெற்றவுடன் புலன்கொள்ளக்கூடிய குற்றமாக இருந்தால் உடனடியாக வழக்கு பதிவு செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கில் பிரிவு 324 இ.த.ச. புலன்கொள்ளகூடிய குற்றம் என்றால் சரிதான். புலன்கொள் குற்றத்திற்கு 2 நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது

என்றால் சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல. மனு ரசீது வழங்கி பிறகுதான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையுடன் மேற்படி மனு ரசீதை ஆவணமாக இணைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கடந்த 17.07.2021-ம் தேதியன்று பதிவு செய்ததாக சொல்லப்படும் முதல் தகவல் அறிக்கை 2 நாட்கள் காலதாமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தற்கு சிறப்பு காரணம் உண்டா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மனு விசாரித்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 13.10.2025
நீதித்துறை நடுவர் எண்.2,
*மன்னார்குடி.*